**பல்லெபொல பிரதேச சபை**
**மாதளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்லெபொல பிரதேச சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள்கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பெகோ இயந்திரத்தை பழுதுபார்பதற்காக தொடர்புடைய தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 406,739 ஆன தொகையை அறவிடப்பட வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 3 வருமான விடயங்களில் வருமானம் ரூபா 3,387,151 குறைத்துக் காட்டப்பட்டது.

(இ) சம்பளம் மீள் நிரப்பல் ரூபா 2,419,225 மிகையாக காட்டப்பட்டது.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்ட சபைக்கு சொந்தமான, 10 வகை காணிகளுக்கான 13.5 ஏக்கர், 5 ரூட் 61 பர்சஸ் நிலத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன், பௌதீகரீதியாக நிலவாத 2 கட்டிடங்களின் கூட்டுத்தொகை ரூபா 144,844 மிகையாக காட்டப்பட்டது.

(உ) கூட்டுத்தொகை ரூபா 5,002,061 ஆன 03 கட்டிடங்களின் மீதி குறைத்துக் காட்டப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான மூலதன செலவு ரூபா 15,890,029 ஆன போதிலும்,நிதிக் கூற்றுக்களில் ரூபா 15,027,153 ஆக காட்டப்பட்டதனால்ரூபா 862,876 இனால் மூலதன செலவு குறைத்துக் காட்டப்பட்டது.

(எ) நிர்மானம் பூர்த்திச்சசெய்யப்படாத 2 கட்டிடங்களுக்காக அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 193,625 மிகையாக காட்டப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பல்வேறு கடன் கொடுத்தோர் மீதி மற்றும் துணைப்பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதி இடையில் ரூபா 111,723 வித்தியாசம் நிலவியது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டுஇறுதியில்பெற வேண்டிய 8 கணக்கு மீதிகளின்கூட்டுத்தொகை ரூபா 18,739,452 ஆனதுடன்,3 வருட காலத்தை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 2,482,878 ஆன மீதி அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டுஇறுதியில்**செலுத்த** வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,370,815 ஆனதுடன்,3 வருட காலத்தை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 2,386,628 ஆன மீதி அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 81,872,736 ஆன 4 கணக்கு விடயங்களுக்கான மீதி கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இலக்கம் 12 கொண்ட முத்திரைக் கட்டணம்(விஷேட ஒழுங்கு) அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | 2015 மற்றும் 2016 வருடங்களினுள் சேர்க்கப்பட்ட ரூபா 56,605 ஆன முத்திரைக் கட்டணம் பொது வைப்பு கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி ஒழுங்கின் 218 ஆம் விதி | 1987 இன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சுற்றிக்கைகள் மற்றும் ஏனையவைகள் | |
| | (i) 2015 மார்ச் 10 ஆம் திகதிய இலக்கம் 03/2014(i) கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் vi காண்டம் மற்றும் மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் இலக்கம் 3/2/1/23 மற்றும் 2015 ஆகஸ்ட் 26 திகதிய கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,000 தொகையை விஞ்சி செலவு செய்யப்பட்ட தொலைபேசி பட்டியல் சமர்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 4,000 வரை பட்டியல் மீள் நிரப்பப்பட வேண்டிய போதும்,பட்டியல் சமர்பிக்கப்பட்டிருக்காத போதும், 2016 மார்ச் முதல் திசெம்பர் வரை ரூபா 4,000 ஆன கொடுப்பனவு சபைச் செயலாளரின் சம்பளத்திற்குசேர்த்து செலுத்தப்பட்டதனால் 2016 ஆண்டினுள் ரூபா 20,000 ஆன தொகை ஆலோசனைகளுக்கு மாற்றமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 1988 மே 17 திகதிய இலக்கம் 1988/22கொண்ட உள்ளுராட்சி திணைக்கள சுற்றறிக்கை. | மீள் மதிப்பீடு செய்யாது 2005 ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வாண்டில் வீதவரி வாடகை பற்றுச்சீட்டிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,247,516 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,629,934 ஆனது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 617,582 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 617,582 ஆன வளர்ச்சிக்கு 3 வருமான விடயங்களில் ரூபா 4,880,566 ஆன வருமான அதிகரிப்பு விஷேடமாக தாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டு துண்டாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணியொன்றின் அறவிட வேண்டிய விற்பனை மீது வரி ரூபா 38,625 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவை வாராந்த சந்தை வாடகைக்காக அறவிடப்பட வேண்டிய தண்டக் கட்டணம் ரூபா 18,800 மற்றும் நிலுவை கடையறை வாடகை ரூபா 21,600 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வீத வரி

நிலுவை வீத வரிமீதி ரூபா 130,681 ஆனதுடன், அம் மீதிக்குள் 3 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 26,799 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

#### 2.3.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 34,542 ஆனது.

#### 2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 939,195மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 6,080,769 ஆன தொகை பெற வேண்டியதாக இருந்ததுடன் 3 வருட காலத்தை விஞ்சிய முத்திரைக் கட்டணம் ரூபா 825,857 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 22,501 ஆக நிலவியது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** சபைக்குஎதிரா தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றிற்கு 2016 ஏப்ரில் 29 திகதி பெற்றுக்கொடுத்திருந்த தீர்வு பிரகாரம் சபை செலுத்தியிருந்த வழக்கறிஞ்ஞர்

கட்டணம் ரூபா 241,770 தொகை முறைபாட்டாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 2014/2015 ஆண்டுகளில் சபைக்கு பெற்றுக்கொடுத்திருந்த LL-7660 க்ரூ கெப் வண்டி மற்றும் PF-7357கொண்ட கெப் வண்டி சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)** கீளாய்வாண்டுமற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் அனுமதிக்கப்பட்டிருந்த 137 கட்டிட திட்டங்களின் 12 க்கு மாத்திரம் 1978 இன் 41 கொண்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ)** 1987 இன் 17 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 24(1) உப பிரிவின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் பாதைகள் தொடர்பான 2015 செப்தெம்பர் 18 திகதி வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்டிருந்த போதும், 24(3)பிரிவின் கீழ் உரித்தான காலத்தினுள் மீள் வர்த்தமானியின் பிரசுரிக்கப்படாததனால் சபையின் பாதைகள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுதலுக்கு இயலாமயிருந்ததுடன், பாதைகள் பதிவேடொன்று பராமரித்திருக்கவில்லை.

**(உ)** சபையின் பதவியனியினரின் 4 பதிவகளில் 11 வெற்றிடங்கள் மற்றும் 5 பதிவிகளில் 7 மிகை ஆனது.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கட்டிட வசதிகள் பெற்றுக்கொள்ளாமல் 2014 ஆண’டின் ரூபா 1,249,840 செலுத்தி தகவல் மத்தியநிலையொன்று நிருவப்படுவதற்கு 10 கணனிகள், 3 அச்சு இயந்திரம்,மல்டிமீடியா பொரெஜெக்டர் ஒன்று, டுப்லோ மெஷின் ஒன்று மற்றும் 10 கணனி கதிரைத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன்,அந்த உபகரணங்கள் தொடர்புடைய வேலைக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் சபையின் பல்வேறு பிரிவுகளில் உபயோகித்துக்கொண்டும் ரூபா 153,744 பெறுமதியான 2 கணனிகள் பிரயோசனமின்றி கலஞ்சியத்திலும் நிலவியது.

## 3.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 4 வாகனங்கள் 2 ஆண்டு முதல் 9 ஆண்டு காலம் வரை விளைவற்றதாக நிலவியன.

(ஆ) இடுகாட்டின் பாதுகாப்பு வேலி நிர்மானிப்பதற்கான வேலைக்காக 2014 திசெம்பர் 12 கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 43,040 ஆன நிர்மானப் பொருட்கள் அதற்காக உபயோகிக்கப்படாமல் விளைவற்றதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் இயந்திரங்களின் மீதியினுள்செயற்படாத நிலையில் உள்ள ரூபா 145,000 பெறுமதியான க்லோரிநேடர் ஒன்று,ரூபா 149,000 தொகை மற்றும் ரூபா 106,030 பெறுமதியான 2 பிரதி எடுக்கும் இயந்திரங்கள் மற்றும் ரூபா 878,200 பெறுமதியான 4 நீர் மோட்டார்கள் கலஞ்சியத்தில் நிலவியதுடன், 2016 ஆண்டின் கிடைத்த ரூபா 143,000 பெறுமதியான கொன்கிரீட் கலவையை இது வரை உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 இனங்காணப்பட் நட்டங்கள்**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றாடல் மற்றும் புணர்ஜனன சக்தி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்த பெரிய தொட்டால்வாடி கருத்திட்டத்திற்காக சபை நிதியத்தினால்ரூபா 1,119.479 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், கருத்திட்டம் தோல்வியடைந்த காரணத்தால் பிரதேச செயளாலரினால் ரூபா 891,000 ஆன தொகை மாத்திரம் மீள்நிரப்பிருந்ததுடன்,2015 செப்தெம்பர் 9 வரை மிகுதி ஒதுக்கீட்டுப் பணம் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்ததனால் மீள்நிரப்பப்படாத ரூபா 228,479 ஆன பணம் சபை நிதியத்திற்கு நட்டமாக இருந்தது.

(ஆ) 6 பதவிகளுக்காக 8 நிரந்தர நியமணங்கள் வழங்கப்பட்டு 2015 திசெம்பர் 11 திகதி அந் நிரந்தர நியமனம் இரத்துச் செய்யப்பட்டதன் அவ் 8 உத்தியோகத்தர்களால் 2016 மார்ச் 01 திகதி சபைக்கு எதிராக உச்ச நிதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்ததுடன் உரிய ஆலோசனை பெறப்படாமல் மற்றும் சுற்றறிக்கைக்கு மாற்றமாக நடவடிக்கை மேற்கொண்டதனால் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 500,000 செலுத்த வேண்டி இருந்தது.

(இ) டீ. பீ. தேன்னகோன் ஞாபகர்த்த சிறுவர் பூங்காவில் வளவை மற்றும் வேலி செய்வதற்கான வேலைக்காக செலுத்தும் போது முற்பணத் தொகையை குறைத்துக் கொள்ளாது கைக் தங்குப் பணத்துடன் முழுத் தொாகையும் செலுத்தப்பட்டதன் காரணமாக செலுத்திய முற்பணத்திலிருந்து ஈடு செய்து கொள்ள முடியாதிருந்த ரூபா 60,000 தொகை சபைக்கு நட்டமாக இருந்தது.

**3.5 ஒப்பந்தக் நிருவாகம்**

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மானிங்கமுவ ஆழ் குழாய் கிணறு நிர்மானித்து நீர் பம்பி மற்றும் உதிரிபாகங்கள் பொறுத்தும் கருத்திட்டம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஓதக்கீட்டுப் பணம் ரூபா 1,200,000 அன குறித்த நீர் கருத்திட்டத்தை மேற்கொள்ள பிரஜைமூல சங்கமொன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்,ரூபா 512,500 பெறுமதியான கழாக்கிணறு உபகரணங்கள் கொளவனவு செய்து ஒப்பந்தத்திற்கு மாற்றமான இடத்தில் குழாய் கிணறு நிர்மானிக்கப்பட்டிருந்தது. சபை மூலம் உரிய மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாக ஒதுக்கீட்டுப் பணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட இயலாமலிருந்தது.

(ஆ) தகவல் தொழில்நுட்ப மத்திய நிலைய கட்டிடம் நவீனமயமாக்கல்

-----------------------------------------------------------------------------------------------------------

முன்னே குறிப்பிட்ட வேலையை ரூபா 1,246,622 ஆன தொகைக்கு மேற்கொள்ள தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமிட்டு முற்பணமாக ரூபா 249,324 செலுத்திருந்ததுடன்ஈரூபா 169,128 ஆன வேலை பகுதியொன்று மாத்திரம் முடிவுசெய்து வேலையை நிறுத்தியிருந்ததனால் சபைக்கு ரூபா 80,196 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தப்படி ரூபா 119,987 ஆன தாமதக் கட்டணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.6 கருத்திட்டங்கள் தாமதித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆண்டுக்குள் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 3 வேலைகளுக்காக ரூபா 900,000 ஆன ஒதுக்கீடு ஏற்படுத்தியிருந்த போதிலும்,2016 திசெம்பர் 31 அன்று ரூபா 303,056பெறுமதியான வேலை தொகையொன்று மாத்திரம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டுக்குள் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பணம் ரூபா 800,000 ஆன 2 கருத்திட்டங்கள் செய்யப்பட்டிக்கவில்லை.

### 3.7 கழிவு பொருள் முகாமைத்துவம்

குப்பை முகாமைத்துவ செயற்பாட்டுக்காக 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் மாகாண குறித்த அபிவிருத்தி உதவியின் கீழ் ரூபா 1,329,560 ஆன தொகை செலவிடப்பட்டு இயற்கை பசளை கொட்டியல் மற்றும் அதற்கு கலஞ்சியயறையொன்று நிர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அது செயலற்றதாக இருந்ததுடன், பிரதேசத்தில் தினத்தோரும் சேரும் ஒரு டொன் அளவான குப்பை மாத்திரம் குப்பை இடப்படும் நிலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இரண்டு மாத்திரம் நடாத்திருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

**(அ)**11 வருமான விடயங்களுகளில் 29 சதவீதம் முதல் 91சதவீதம் இடையில் வீச்சளவான எதிர்ப்பார்க்கப்பட்ட வருமானம் உழைப்பதற்கு இயழாம இருந்ததுடன், 15 செலவின விடயங்களுகளில் தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையில் 34 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(ஆ)** மீளாய்வாண்டினுல் வருமானம்மற்றும் செலவுவிடயங்களுகளில் இடையில் உள்ளாக்கியதன் ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும்,பாதிடபட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு.

(ஆ)சொத்துக்கள் முகாமைத்துவம்.

(இ) பாதீடு கட்டுப்பாடு.

(ஈ) வாகன கட்டுப்பாடு